



**கருத்துகளை நிரல்படுத்துக. பிறகு காலியான இடத்தில் பொறுத்துக**

இன்றைய காலத்தில் எல்லாவற்றிற்கும் அடிப்படையாக இருப்பது பணமே! சொந்தத் தொழில் செய்வோருக்கு வரம்பின்றி பணம் வந்து சேருவதற்கு வாய்ப்புகள் அதிகமே! சுயத் தொழில் செய்ய அடிப்படையாக இருப்பது உழைப்பு. ஒருவன் சோம்பலின்றி சொந்தத் தொழிலைச் சளைக்காமல் செய்கையில் அவனிடம் செல்வம் குவியும்; அவன் சேமிப்பு நாளுக்கு நாள் அதிகரிக்கும். சான்றாக இன்றைய காலத்தில் நாம் அன்றாட வாழ்க்கையில் காண்கின்ற சுயத்தொழில் வியாபாரிகளிடம் பணம் மிகுந்து கிடப்பதை நாம் பார்க்கலாம்.

பொதுவாக சொந்தத் தொழில் செய்பவரிடம் திறமைகள் அதிகம் காணப்படும். இத்தொழிலைக் கைக்கொள்ளும் வேளையில், அவர்கள் சதா எந்நேரமும் தொழிலை விருத்தியாக்க கவனம், சிந்தனை ஆகியவற்றை அதிகம் செலுத்துவர். அவர்கள் ஊக்கத்தோடு செய்யும் செயலே அவர்களின் உன்னத ஆக்கத்திற்கு வழிவகுக்கிறது. இதனால், வாழ்க்கையில் முன்னேற்றம், மேம்பாடு ஒவ்வொரு நாளும் அதிகரிப்பதை பலரிடம் நாம் காண்கிறோம்.

பல்லின சமுதாயத்தில் வளமும் நலமும் பெற்று வாழவும் நன்மதிப்பைப் பெறவு ம் சொந்தத் தொழில் அதிகம் கைக்கொடுக்கிறது. எனவே, இளைய தலைமுறையினர் இந்த உண்மையறிந்து சொந்தத் தொழில் செய்வதற்கு முனைப்பு காட்டுவோராக!

சொந்தத் தொழில் செய்வதால் தன்னம்பிக்கை, சுயகாலில் நிற்றல் ஆகிய பண்புகள் அதிகம் உருவாகும். சொந்தத் தொழில் செய்வதற்குச் சுயமாகத் திட்டமிட்டுச் செயல்படலாம். வேலைகளின் தேர்வு, இடம் முதலீடு ஆகியவற்றை நாமே தேர்ந்தெடுக்கச் சுதந்திரம் உண்டு. சான்றாக வியாபாரம் செய்வோர், எந்த வகை தொழில் செய்ய இயலும் என்பதை முடிவு செய்து, பொருத்தமான இடம் சேமிப்பு பணம் போன்ற வசதிகளைக் கொண்டு சுயத் தொழில் செய்வதை நாம் கண்கூடாகக் காண்கிறோம்.

சொந்தத் தொழில் செய்வோர் நேரக் கட்டுப்பாடு பற்றி சிந்திக்க அவசியமில்லை. அவர்கள் நினைத்த நேரம் தொழிலைச் செய்யலாம் அல்லது செய்யும் நேரத்தை அதிகரிக்கலாம். அவர்கள் சிந்திக்க வேண்டியது உழைப்பு ஒன்றை மட்டும் தான். கொடுக்கப்படும் நேரத்திற்குக் கட்டாயம் அடுத்தவருக்கு அடிமையாக அலுவல் புரியவேண்டும் எனும் நிலை சுயத்தொழில் செய்வோருக்கு இல்லை.

இன்றைய நவீன உலகில் மனிதன் பல துறைகளில் அரிய முயற்சிகள் செய்து பல ஆற்றல்களைச் செய்து வருகிறான். பழங் காலத்தில் நம் முன்னோர், உடல் உழைப்பு மூலதனமாகக் கொண்டு பிறரிடம் வேலை செய்து வாழ்க்கை நடத்திக் கொண்டு வந்தனர். ஆனால், தற்காலத்தில் நிலைமை அவ்வாறு இல்லை. ஒவ்வொரு மனிதனும் சுயமாக வியாபாரமோ அல்லது சுயதொழிலோ செய்து முன்னேற்றம் அடைந்து வருகிறான். சொந்தத் தொழில் செய்வதனால் நமக்குப் பல நன்மைகள் கிடைக்கின்றன.

